பல்லாவரத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஆர்கிட்ஸ் சர்வதேசப் பள்ளியை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி, தாம்பரம் துணை மேயர் கோ.காமராஜ் மண்டலக்குழுத் தலைவர் இஜோசப் அண்ணாதுரை, மற்றும் இந்திய மகளிர் கிரிக்கெட் வீராங்கனை திருமதி. ஹேமலதா தயாளன் ஆகியோர் திறந்து வைத்தனர். பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள அதிநவீன நடனம், இசை, நாடகம், கோடிங், ரோபோடிக்ஸ், மட்பாண்டம், நெசவு ஸ்டுடியோக்களைப் பார்வையிட்ட சிறப்பு விருந்தினர்கள், அவற்றின் சிறப்பு அம்சங்களைப் பெரிதும் பாராட்டினர். ஆர்கிட்ஸ் சர்வதேசப் பள்ளியின் மண்டலத் தலைவர் சிவகுமார், சர்வதேச அளவிலான திறன் மேம்பாட்டுத் திட்டங்கள், கல்வி மற்றும் கலை சார்ந்த பாடத்திட்டங்கள், மற்றும் கற்பித்தல் முறைகள் குறித்து சிறப்பு விருந்தினர்களுக்கு விரிவாக விளக்கினார்.

தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட

குழந்தைகள் மையத்தில் வயிற்றுப்போக்குத் தடுப்பு சிறப்பு மருத்துவ முகாம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்!

சென்னை, ஜூன்.17- பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், சித்த ரஞ்சன் சாலையில் உள்ள குழந்தைகள் மையத்தில் வயிற்றுப்போக்கு தடுப்பு சிறப்பு மருத்துவ முகாமினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (16.06.2025) தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், முறையாக கைகழுவுவதன் அவசியம், கைகழுவும் முறை மற்றும் ஓ.ஆர்.எஸ். உப்பு சர்க்கரை கரைசல் தயாரிக்கும் முறை குறித்த விளக்க நிகழ்ச்சியினைப் பார்வையிட்டார்.

தொடர்ந்து, ஓ.ஆர்.எஸ். கரைசல் தயாரிக்கும் முறை மற்றும் பயன்படுத்தும் முறை குறித்த பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான பதாகையினை வெளியிட்டார். மேலும், குழந்தைகள் மையத்தில் உள்ள குழந்தைகளுக்கு 2 ஓ.ஆர்.எஸ். கரைசல் பாக்கெட்டுகள், 14 துத்தநாக மாத்திரைகள், விழிப்புணர்வு கையேடு மற்றும் பரிசு ஆகியவை அடங்கிய மருத்துவப் பெட்டகங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வுக் குழும இயக்குநர் மருத்துவர் அருண் தம்புராஜ், பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மருத்துவர் டி.எஸ். செல்வவிநாயகம், நிலைக்குழுத் தலைவர் டாக்டர் கோ. சாந்தகுமாரி, மாமன்ற உறுப்பினர் கி.மதிவாணன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசின் திட்டத்தை முன்மாதிரியாகப் பின்பற்றி

ஒன்றிய அரசின் பெண் ஊழியர்களுக்கு மகப்பேறு விடுமுறை காலத்தை நீட்டித்திடுக!

ஒன்றிய அமைச்சருக்கு கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

சென்னை, ஜூன் 17 - வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்கள் ஒன்றிய அரசு பணியாளர் நலத்துறை மற்றும் ஓய்வூதியப் பயன்கள் துறையின் துணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திராசிங் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் மத்திய அரசு பெண் ஊழியர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் 180 நாட்கள் அதாவது 6 மாத கால மகப்பேறு விடுமுறைக் காலத்தை ஒரு ஆண்டாக நீட்டித்து ஆணை வெளியிடும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு அரசு தமிழக அரசுப்பணியில் உள்ள பெண் ஊழியர்களுக்கு சமீபத்தில் மகப்பேறு விடுமுறைக் காலத்தை 6 மாதங்களில் இருந்து ஒரு ஆண்டாக அதிகரித்து ஆணையிட்டுள்ளது. தமிழக அரசின் இத் துணிச்சலான திட்டம் பலராலும் பாராட்டப்பட்டு வருகிறது. தமிழக அரசின் இந்த முன்மாதிரி திட்டம், பெண் அரசு ஊழியர்களுக்கு பிரசவ காலத்தில் ஏற்படும் உடல் நலப் பிரச்சினைகளுக்கு உதவக்கூடிய வகையிலும் அவர்கள் குழந்தைகளின் நலத்துக்கும் உதவியாக அமைந்துள்ளது.

உலக சுகாதார நிறுவனம் கூட பெண் ஊழியர்களுக்குப் போதுமான பிரசவகால விடுமுறை வழங்குவது அவர்கள் உடல் நலத்தைக் காக்க உதவுவதுடன் குழந்தைகளுக்குக் குறைந்த பட்சம் 6 மாத காலமாவது தாய்ப்பால் கொடுக்க வழி ஏற்படும். இதனால் தாய்மார்களின் நலனும், குழந்தைகளின் ஆரோக்கியமும் காக்கப்படும் என்று கூறியுள்ளது.

எனவே, தமிழ்நாடு அரசின் திட்டத்தை முன்மாதிரியாகப் பின்பற்றி ஒன்றிய அரசின் பெண் ஊழியர்களுக்கும் ஒரு ஆண்டு மகப்பேறு விடுமுறை வழங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க கேட்டுக் கொள்கின்றேன் என்று கூறியுள்ளார்.

இவ்வாறு டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி. அக்கடிதத்தில் கூறியுள்ளார்.